
## உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும்

**மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? (மாற்கு 8:36)**




இன்று இந்த உலகில் உள்ள ஒவ்வொருவரும் எதையாவது ஒன்றை அடையும்படியாய் ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். சிலர் பணத்தின் பின்னே சென்று, இரவு பகலாய் பணம் சம்பாதிப்பதே நோக்கமாகக் கொண்டு ஓடுகிறார்கள். சிலர் அதிகாரத்தை, மேலான பதவியை, புகழை அடையும்படி ஓடுகிறார்கள். இன்னும் சிலர் அதிக ஞானத்தை அடைய ஓடுகின்றனர். இன்னும் சிலர் சுகபோகமான வாழ்க்கை எப்பொழுதும் வாழ நினைக்கின்றனர். இவற்றில் சிலர் பணம், பதவி, அதிகாரம், புகழ், சுகபோகமான வாழ்க்கை என அனைத்தையும் அனுபவிக்க நினைக்கின்றனர். இதனால் இறைவனை குறித்தோ, சக மனிதரை குறித்தோ எந்தவித கவலையும் இன்றி வாழ்கின்றனர். இன்னும் சிலர் இவற்றையெல்லாம் அடையும்படி சக மனிதர்களை ஏமாற்றி, துன்புறுத்தி, அடிமைப்படுத்தி, அவர்கள் உழைப்பை உறிஞ்சி, தேவனுக்கு ஏற்காதவர்களாய் வாழ்கின்றனர். ஆனால் ஆண்டவர் சொல்கிறார், அவர்கள் நினைத்தபடி உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தங்கள் ஜீவனை நஷ்டப்படுத்தி கொள்ளும் அவர்களுக்கு, இந்த பணம், பதவி, பட்டம், புகழ், சுகபோக வாழ்க்கை ஆகிய இவைகளினால் என்ன லாபம்? உயிர் போகும் ஒரு நொடி பொழுதில், இவையெல்லாம்

ஒன்றுமில்லாமல் போய்விடும். ஆனால் அதைப்பற்றிய அறிவு இவர்கள் ஒருவருக்கும் இல்லை. ஏதோ இவை தங்களை காலம் காலமாய் வாழவைக்கும் என்று நினைக்கின்றனர். உலகம் முழுவதையும் கைப்பற்றி ஆள நினைத்த மகா அலெக்சாண்டர் முப்பத்தி இரண்டாம் வயதில் தன் மரணப்படுக்கையில் இதை உணர்ந்தான். அதனால் தன் கைகளை தன் சவப்பெட்டிக்கு வெளியே வைத்து, தன்னை கொண்டு செல்ல கூறினான். உலகம் முழுவதையும் குறுகிய காலத்தில் தன் அதிகாரத்திற்குட்படுத்தி, ஆள நினைத்த தான் வெறுங்கையனாய் செல்வதை, உயிரோடு இருக்கும் மற்றவர்களாவது உணர்ந்து தங்கள் ஜீவனை தப்புவித்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்தான். ஆனால் அவனுக்கோ காலம் கடந்து போய்விட்டது. அப்படியானால் பணம், பதவி, பட்டம் என இவை எதுவும் தேவை பிள்ளைகளுக்கு இருக்கக்கூடாதா என்று நாம் கேட்கலாம்.

ஆனால் ஆண்டவர் அதையும் தெளிவாய் **மாற்கு 10:24** இல் **"ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது!"** என்றார். அதன் பின்பே **மாற்கு 10:25** இல் **"ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார்."** ஆம் மேலே குறிப்பிடப்படும் ஐஸ்வர்யவான், தேவன் மேல் நம்பிக்கை வைக்காமல் ஐஸ்வர்யத்தின் மேல் நம்பிக்கை வைக்கிறவன். ஆனால் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோபு, தாவீது, யோசேப்பு, தானியேல் என இவர்கள் யாவரும் ஐஸ்வர்யவான்களாய், அதிகாரம் உடையவர்களாய், புகழப்பட்டவர்களாய், ஞானவான்களாய் இருந்தனர். ஆனால் அவர்கள் தங்கள் ஜீவனை நஷ்டப்படுத்தாமல், தேவ மனிதர்களாய் இருந்தனர். காரணம் தங்களுக்கு இவ்வுலகத்தில் கொடுக்கப்பட்ட யாவும் இறைவனால் அருளப்பட்டது என்றும், அதை தேவ நாம மகிமைக்காக பயன்படுத்த வேண்டும் என்றும் அறிந்திருந்தனர். அதனால்தான் தாவீது தான் சம்பாதித்து வைத்திருந்த எண்ணற்ற ஐஸ்வர்யத்தை தேவாலயம் கட்ட அர்ப்பணித்தார். யோசேப்பு, தானியல் போன்றோர் தங்கள் வரத்தை / ஞானத்தை, தங்களை மேன்மைபடுத்திக்கொள்ள பயன்படுத்தாமல், அதன் மூலம் தேவ நாமம் மகிமை அடைய செயல்பட்டனர்.

மேலும் இவையெல்லாம் இல்லாமலும், தங்களை தேவனால் நடத்த முடியும் என்று நினைத்தனர். ஆபிரகாம் ஒரு புறம் ஐஸ்வர்யவானாய் விருத்தி அடைந்து வந்தாலும், லோத்துவை மீட்டெடுத்து, அத்தோடு கூட சோதோமின் மனிதர்களை மற்றும், அவர் உடைமைகளை மீட்டெடுத்து வரும்பொழுது, **"சோதோமின் ராஜா ஆபிராமை நோக்கி: ஜனங்களை எனக்குத் தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்றான்." (ஆதி 14:21)**. அக்கால நியாயப்படி போரிட்டு ஜெயிப்போர், உடைமைகளை கைப்பற்றுவது இயல்பானதாகும். ஆனால் ஆபிரகாமோ, அது தேவனால் தனக்கு கொடுக்கப்படவில்லை என்பதை உணர்ந்து **"அதற்கு, ஆபிராம் சோதோமின் ராஜாவைப் பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று, வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்." (ஆதி 14:22,23)**. இங்கு வானத்தையும், பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவன் என்று அவர் குறிப்பிடுவது, மிக அருமையானதாகும். தேவன் பூமிக்கும், வானத்திற்கும் மேலாக உன்னதத்தில் இருக்கிறார். அப்படிப்பட்டவர் மூலமாகவே தனக்கு அருளப்படும் வானத்திற்கும் (ஆவிக்குரிய) ஆசீர்வாதங்களும், பூமிக்குரிய (இவ்வுலகத்திற்குரிய) நன்மைகளும் தனக்கு போதுமானது, அதைத் தவிர வேறு எந்த வழியில் வரும் பொன்னும், பொருளும், வேறு எந்த ஆசிர்வாதமும் தனக்கு தேவையில்லை என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

மேலும் யோபு, கர்த்தர் தனக்கு இப்பூமியில் கொடுத்த எல்லா ஆசீர்வாதங்களையும் எடுத்துக் கொண்ட பின்பும், **யோபு 1:21** இல் **"கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்."** மேலும் **யோபு 2:10** இல் தன் மனைவியிடம் **"நீ பயித்தியக்காரி பேசுகிறதுபோலப் பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ என்றான்"**. ஆம் இவ்வுலகத்தில் தனக்கு கொடுக்கப்பட்ட அனைத்தும், தான் தன் சுய பலத்தினால் சம்பாதித்தது அல்ல, தேவ கரத்தினால் அருளப்பட்டது என்பதை அறிக்கையிட்டார். ஆம் நமக்கு இவ்வுலகில் கொடுக்கப்பட்டிருக்கும் அனைத்தும் தேவனால் நமக்கு கொடுக்கப் பட்டது, அதை அவர் நாம மகிமைக்காக பயன்படுத்த வேண்டும் என்பதை, நாம் உணர்வோமானால், நம் ஜீவனை நாம் நஷ்டப்படுத்தாமல், தேவ ராஜ்யத்தில் பிரவேசிக்க பாத்திரவான்களாய் இருப்போம்.

எனவே தம் சித்தப்படி எதையெல்லாம் தேவன் நம் வாழ்வில் தருகிறாரோ, அது செல்வமானாலும், அதிகாரமானாலும், ஞானமானாலும், அதைப் பெற்று அனுபவித்து, அதன் மூலம் தேவ நாமம் மகிமைப்படும்படியாய், மற்றவர்களுக்கும் அவர் சித்தப்படி பகிர்ந்தளித்து வாழுவோமானால், அப்பொழுது அது நன்மையாக இருக்கும். ஆனால் அவ்வாறு இல்லாமல் **"அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து, பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார்." (லூக் 12:17-21)**.

மேற்கண்ட காரியங்கள் ஐஸ்வர்யவானை பற்றியது என்பது நமக்கு நன்றாக தெரியும். இதை ஆண்டவர் கூறுவதற்கு முன் **லூக் 12:15** வசனத்தில் **"பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல"** என்று கூறி அதற்கு உவமையாகவே மேற்கண்ட ஐஸ்வர்யானைப் பற்றி கூறினார். இங்கு நாம் கவனிக்க வேண்டிய காரியம் பொருளாசை. ஆம் ஐஸ்வர்யவானாய் இருப்பது குற்றமல்ல, ஏனெனில் தேவனே பூமியின் பலனாகிய அவனது நிலத்தை நன்றாய் விலை செய்தார் (**லூக் 12:16**). இவ்வாறு தேவனால் நல்ல விளைச்சலைப் பெற்று, வேலைக்காரரின் கடின உழைப்பினால் நல்ல அறுவடையை பெற்றவன், அதை எவ்வகையில் செலவழிக்க, தனக்கும் மற்றவர்களுக்கும், பிரயோஜனம் உண்டாக பயன்படுத்த வேண்டும் என்பதை சிந்தியாமல், தான் இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாய் இருப்பதற்கு அதை பயன்படுத்த ஆசைப்பட்டதே அவனுடைய பொருளாசை ஆகும்.

அதனால் இவ்வுலக ஐஸ்வர்யம் அவனுக்கு இருந்தும், தேவனுடைய பார்வையில், அவரிடத்தில் ஐஸ்வர்யவானாய் அவன் காணப்படவில்லை. எனவே அவனிடத்தில் காணப்பட்ட குற்றம், தேவ சித்தப்படி தன் செல்வத்தைப் பயன்படுத்தி தேவனிடத்தில் ஐஸ்வர்யவானாய் இல்லாமல், தனக்காகவே பொக்கிஷங்களை சேர்த்து வைத்தது தான். எனவே முதலாவதாக நமக்கு இருக்கும் பணம், பதவி, பொருள், ஞானம் யாவும் இறைவனால் நமக்கு கொடுக்கப்பட்டது என்ற அறிவு நமக்கு வேண்டும். மேலும் அப்படிப்பட்ட காரியங்களை பெருக்கிக் கொள்ளும் போதும், தேவ சித்தப்படி அவை நம்

வாழ்வில் நடைபெறுகிறதா அல்லது குறுக்கு வழியில் நாம் அதை சேர்கிறோமா என்பதை உணர்ந்துகொண்டு, ஆபிரகாமை போல் அறிக்கையிட வேண்டும். மேலும் அதை சரியானபடி செலவு செய்து, தேவனிடத்தில் ஐஸ்வரியம் உள்ளவர்களாய் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். இறுதியாக இவையெல்லாம் ஒரே நாளில் நம்மை விட்டு எடுத்துக்கொள்ளப்பட்டாலும், "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" என்று யோபுவை போல் அறிக்கையிட தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுது, உலகத்தை ஆதாயப்படுத்த நினைத்து, நம் ஜீவனை நஷ்டப்படுத்தி கொள்ளாமல், இவ்வுலகத்திலும் ஐஸ்வர்யவான்களாய், தேவனிடத்திலும் ஐஸ்வர்யவான்களாய் இருந்து, நித்திய ஜீவனையும் பெற்று, நம் ஆத்துமாவை, நஷ்டப்படுத்தாமல் ஆதாயப்படுத்திக் கொள்வோம், ஆமென் அல்லேலூயா.